# விளம்பரம்™
## VLAMBARAM™

☎ : 416-282-8059 மாதமிருமுறை வெளிவரும் சமூக முன்னேற்றப் பத்திரிகை இலவசம் FREE

நதி 09 - பாலம் 06

MARCH 15, 1999



**வீடு விற்பது, வாங்குவது**

வாழ்வில் முக்கியமான செயல்களில் ஒன்று. எனவே இவை பற்றி பூரணமான இலவச ஆலோசனைகளைப் பெற அழையுங்கள்:

☎ : 416-287-2183/491-4002

ராஜா எம். மகேந்திரன் sales rep.

RE/MAX Crossroads Rlty Inc.

நம்பிக்கை ▲ நேர்மை ▲ திறமை



❊ சுவாசிக்கும் காற்றிற்கு என்ன விலை (பக்கம் 2)

❊ என் வழக்கை நானே பேசலாமா (பக்கம் 4)

❊ சிவாஜியின் நடிப்பு வாரிசு யாராக இருக்கலாம்? (பக். 7)

❊ காலாவதியாகும் நிலையிலுள்ள சாரதி அனுமதிப்பத்திரம் (பக். 10)



**SABONA & Gift**

"முடி உதிரும் தொல்லை இனி இங்கு இல்லை "எவமாட்டின்" சகல கலைமகள் புத்தக நிலையங்களிலும் கிடைக்கும்

☎: (416) 264-8787 ☎: (416) 269-8151

3238 Eglinton Ave. E. Scarborough, Ont. M1J 2H6 (கலைமகள் புத்தக நிலையத்திற்கு உள்ளே)



❊ வாகனத்தில் சில்லின் மேலதிக காற்றை வைத்திருக்கலாம்? (பக்கம் 7)

❊ கனடிய தமிழர் உதைபந்தாட்ட அணியின் சாதனைகள் (பக். 6)

❊ சூரிய குடும்பத்தில் எத்தனை கோள்கள் உள்ளன? (பக்கம் 12)

❊ மந்தத் தன்மையை யோகாசனம் நிவர்த்தி செய்யுமா? (பக். 4)


### அறிந்து அதன்படி செயல்பட சில உணமைகள்

- ☞ மனிதனை மாற்றியமைக்கும் விதி, அவனது ஒழுக்கமே!
- ☞ பகலுக்கு கண்கள் உண்டு; இரவுக்குச் செவிகள் உண்டு
- ☞ இரகசியத்தில் கொஞ்சம் வெளிப்பட்டாலும் போதும்; எல்லாம் வெளியே வந்துவிடும்
- ☞ நல்லவை நத்தை வேகத்தில் நகரும்; தீயவை ரொக்கட் வேகத்தில் பறக்கும்
- ☞ சிரித்த முகமில்லாதவன் சொந்தமாகக் கடை நடத்தக்கூடாது.
- ☞ நீ உன்னை நேசித்தால் இன்பம்; பிறரை நேசித்தால் பேரின்பம்
- ☞ சாதாரண அறிவால் செய்ய முடியாததைச் செய்வதுதான் விவேகம்
- ☞ காலமும் நேரமும் வந்தால் காரியம் கை கூடும். ஆனால் காலம் வரும் என எண்ணிக் கடமையைக் கைவிடாதே.
- ☞ உண்மையைப் பேசி உத்தமனாக வாழ்க

### சிந்தனைத் துளிகள்

#### கடமை, கண்ணியம், கட்டுப்பாடு

**கட்டுப்பாடு -**

ஒவ்வொரு செயலிற்கும் ஒரு கட்டுப்பாடு உண்டு. ஒவ்வொருவரிற்கும் ஒரு கட்டுப்பாடு உண்டு. கட்டுப்பாடு தாங்கள் தங்களிற்காகவும் ஏற்படுத்தலாம். மற்றவர்கள் ஏற்படுத்திய கட்டுப்பாட்டையும் நாங்கள் மதித்து நடக்கவேண்டும் அல்லது செயற்படுத்த வேணடும். உதாரணமாக வாகனம் ஓட்டும்போது 40 கிலோமீற்றர் வேகக் கட்டுப்பாடாக இருக்கும். இதை மீறலாம், மீறாமல் விடலாம். மீறினால் தண்டனை கிடைக்கும்/கிடைக்காமல் போகலாம். இது மனிதனால் மனிதனிற்காக ஏற்படுத்திய கட்டுப்பாடு அல்லது சட்டம் என்பதாகும்.

சில கட்டுப்பாடுகள் பலமுறை மீறலாம். அவற்றிலிருந்து தப்பிக்கொள்ளலாம். என்றோ ஒரு நாள் மாட்டிக்கொள்ளலாம். ஏனெனில் மனிதனால் உருவாக்கிய கட்டுப்பாடு. சில கட்டுப்பாடுகளை இயற்கை ஏற்படுத்தியுள்ளது. இந்தக் கட்டுப்பாடுகளை எப்பொழுதும் யாவராலும் மீறமுடியாது.

### உன்னை அறிந்தால்.......

21 ஆலோசனைகள் (சென்ற இதழ் தொடர்ச்சி)

11. தொடர்ந்த முன்னேற்றத்திற்கு உங்களை அர்ப்பணியுங்கள் (அதாவது அறிவை வளருங்கள்)
12. சிறந்த தரத்தை (Qluality) அடைவதற்கு உங்களை அர்ப்பணியுங்கள்
13. உடமைகள் (Possessions) அதிகாரம் (power) அல்லது மகிமை (Prestige) ஆகியவற்றின் அடிப்படையில் சந்தோஷம் தங்கி இருக்க வில்லை. ஆனால் மக்களுக்கு அன்பு செலுத்தி கௌரவிக்கும் உறவில்தங்கியுள்ளது என்பதை விளங்கிக் கொள்ளுங்கள்.
14. விசுவாசமாக நன்றியுடையவராக இருங்கள்
15. உங்களிற்கும் மற்றவர்களிற்கும் நேர்மையாக இருங்கள்
16. சுய ஆரம்பிப்பாளராக இருங்கள் (நீங்களே சிந்தித்து ஆரம்பியுங்கள்).
17. சில நேரங்களில் நீங்கள் பிழையாக இருந்தாலும் தீர்மானத்தில் உறுதியாக இருங்கள்.
18. மற்றவர்களை குற்றம் சாட்டுவதை நிறுத்துங்கள்; தவறுகளை ஏற்றுக்கொள்ளுங்கள், உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியின் பொறுப்பை நீங்களே எடுங்கள்.


**SINGAPORE CELLULAR**



Bell Mobility

$50.+Tax per Month

CANTEL

மாலை 7 மணி தொடக்கம்
காலை 7 மணி மட்டும் இலவசம் (FREE)
வெள்ளி மாலை 7 மணி தொடக்கம்
திங்கள் காலை 7மணி மட்டும் இலவசம் (FREE)
175 min FREE (Month) Add. 20 cents only
Additional every Min. 20 சதம் மட்டுமே

Mobile Message, Call Forwarding FREE
Call Display, Call Waiting FREE, Per Second Billing
For more Information: சத்தி (416) 745-2378

Hotline: (416) 980-1234

**துரித பணமாற்றுச் சேவை**

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கு கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221

**சிவாகம கிரியா பீடம்**



☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை கடை திறப்பு, லக்சுமி பூஜை சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜைகள் மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம் ஆயுஷ்ய ஹோமம் தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறையா? தலைஅலங்கார ஜோடனைகளா? ஜடை நாகம் ஆண்டாள் மாலைகளா? தலைப்பாகையா? பரத நாட்டிய அலங்கார ஆபரணங்களா? மற்றும் கல்யாண மண்டபமா? உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள்.

சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள் (கண்ணன் குருக்கள்)
திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்
5 Greenleaf Terr. , Scarborough, Ont.

# அறிவும் ஆக்கமும் (30)



- விஜே குலத்துங்கம்

சென்ற இதழில் மக்களை ஏமாற்றும் சில மோசடிகளைப் பற்றிப் பார்த்தோம். மேலும் சில மோசடிகள் பற்றி இந்த இதழில் பார்ப்போம். அதிகளவில் மோசடி நடைபெறுவது கடன் அட்டைகள் எனப்படும் Credit Card மூலமாகத்தான். சென்ற ஆண்டு 168 மில்லியன் டொலர்கள் இந்த கிறடிட் கார்ட் மூலம் நடந்துள்ளது. கூடுதலாக நடைபெறுவது என்னவென்றால் எமக்கு தெரியாமல், எம்முடைய கணக்கில் காசு எடுக்கப்படுவதாகும். சில இடங்களில் இயந்திர வசதிகள் இல்லாத இடத்தில், கிறடிட் கார்டை சில காபர்ன் கொப்பி உள்ள சிறிய தாளின் மேல் வைத்து ஒரு அழுத்தியினால் அமத்தி இலக்கத்தையும் மறு விபங்களையும் பதிய வைப்பார்கள். நீங்கள் சரியாக கவனிக்காதுவிட்டால், சிலர் இரண்டு பிரதிகளை வைத்து விபரங்களை எடுத்து விடுவார்கள். சில காலங்களின் பின்னர் இரண்டாவது பிரதியை உபயோகித்து பணத்தை கறந்து விடுவார்கள். ஆனால் தற்போது தொழில் நுட்பவியல் மிகவும் வளர்ந்த காலத்தில் மேலும் ஒரு படி சிறப்பான முறையில் போலி அட்டைகள் தயாரிக்கும் மோசடியிலும் சிலர் ஈடுபட்டுள்ளனர். நீங்கள் கிறடிட் காட்டைக் கொடுக்கும் போது உங்களீக்கு தெரியாமல் இன்னொரு இயந்திரத்தினூடாக அதைச் செருகி அட்டையின் விபரங்களை எடுத்து விடுகின்றார்கள். பின்னர் அதை உபயோகித்து போலி அட்டை தயாரிக்கின்றார்கள். எனவே கிறடிட் கார்டை கொடுத்து விட்டு, அதற்கு என்ன நடக்கின்றது என்பதை அவதானித்தல் அவசியம். கிறடிட் காட் இலக்கங்களை தொலைபேசி மூலம் கொடுப்பதை தவிர்த்தல் வேண்டும். அத்துடன் Internet இலும் இலக்கங்களை கொடுப்பதை தவிர்க்க வேண்டும்.

சென்றவருடம் டொரண்டோவில் நடந்த இன்னொரு மோசடி பற்றி அறிந்திருத்தல் அவசியம். சிலருக்கு வீடுகளில் பனிமழை பெய்தால், Snow வைத் தள்ளுவது கஷ்டம். முக்கியமாக ஓய்வு பெற்று தனியே வீடுகளில் இருக்கும் வயோதிபர்களுக்கு இது கஷ்டம். இவர்கள் பணம் கொடுத்து Snow அகற்றல் செய்விப்பார்கள். சென்ற ஆண்டு ஒருவர் இப்படியான வீடுகளுக்கு சென்று நன்கு கதைத்துப்பேசி, ஒரு பருவகாலத்தில் பெய்யும் முழு Snow வையும் தன்னுடைய இயந்திரத்தின் மூலம் மிகக் குறைந்த விலையில் தள்ளுவதாகவும், அதிக ஓடர்கள் இருப்பதால் முன்பணம் செலுத்துபவர்களுக்கு மாத்திரம் முன்னுரிமை அளிக்கப்படும் என கூறியுள்ளார். மலிவாக கிடைக்கின்றதென பலர் பணம் கொடுத்துள்ளார்கள். இப்படியாக பலரிடம் பணம் சேர்த்துக் கொண்டு அந்த நபர் நாட்டை விட்டே சென்று விட்டார். எனவே வேலை முடியுமுன்னர் முன்பணம் செலுத்துவது ஆபத்தான காரியம்.

நீண்ட தூர தொலைபேசிச் சேவையிலும் மோசடிகள் நடந்துள்ளன. சில காலங்களுக்கு முன்னர், தொலைபேசியில் சில இலக்கங்களையும் #, * போன்ற அடையாளங்களையும் கொண்ட ஒரு கோர்வையை அழுத்துவதன் மூலம் Bell Canada வை விட்டு, வேறு ஒரு நிறுவனத்துக்கு சேவையை மாற்றக்கூடியதாகவிருந்தது. அதன்போது, தொலைபேசியில் ஒருவர் அழைத்து, Bell Canada விலிருந்து உங்கள் தொலைபேசி சரியாக வேலை செய்கின்றதா என பார்க்க வேண்டும். எனவே குறிப்பிடும் இலக்கங்களையும், அடையாளங்களையும் அழுத்தவும் எனக் கூறுவார்கள். அதன்பின்னர் நீங்கள் நீண்ட தூரச் சேவை இலக்கத்தை அழைத்தால், அந்தக் கட்டணம் வேறு நிறுவனத்திற்கே செல்லும். எனவே தொலைபேசியில் தெரியாத ஒருவர் அழைத்து என்ன சொன்னாலும் அதைச் செய்யாது, அவர்களிடம் தகவல்களை தபாலில் அனுப்பும்படி கேட்க வேண்டும்.

மேற்கூறியதைப் போன்றுதான், வீடுகளுக்கு Gas வழங்கு நிறுவனத்தை, தங்களிடம் மாற்றி எடுப்பதற்காக தற்போது Gas வழங்கும் நிறுவனம் உங்களுக்கு 25 டொலர்கள் Rebate தருகின்றார்கள். அதைப் பெற்றுக் கொள்ள சில பத்திரங்களை நிரப்பவேண்டும் எனக் கூறி, உங்கள் விபரங்களை எல்லாம் எடுத்துவிட்டு, உங்களிடம் கையெழுதை வாங்கிச் செல்வார்கள். உங்களுக்கு 25 டொலர்களுக்கு காசோலை வரும். அக்காசோலையை நீங்கள் பணமாக்கினால் நீங்கள் புதிய நிறுவனத்திற்கே உங்கள் வீட்டிற்கு Gas விநியோகிக்கும் உரிமையை கொடுத்து விடுகின்றீர்கள்.

இன்னொரு விதமான வியாபார தந்திரமும் உள்ளது. நீங்கள் 10 CD க்களை அல்லது 10 வீடியோக்களை, ஒன்று 1 சதப்படி பெறலாம் என வீட்டிற்கு தபால் மூலம், சில விளம்பர படிவங்கள் வரும். ஆனால் அதை முழுவதாக வாசித்தால்தான் அதில் சிறிய அளவில் குறிப்பிட்டு இருப்பதை அறியலாம். →

அதாவது இந்த CD க்கள் அல்லது வீடியோக்களைப் பெற்றால் பின்ன இரண்டு வருடங்களுக்கு அவர்கள் வெளியிடும் சில வீடியோக்களை குறிப்பி விலையில் வாங்க வேண்டும் என்ற ஒப்பந்தம் ஏற்படுத்தப்படும் எனே அவர்கள் 1 சதத்திற்கு கொடுத்து ஏற்படும் நட்டத்தை பின்னர் எடுத் விடுவார்கள்.

எனவே எந்த விடயத்தையும் எடுத்த மாத்திரத்தில் நம்பிவிடாது, அல ஆராய்ந்து தீர்க்கமான முடிவு எடுப்பது அவசியம். ஏன் நாங்கள் இலகுவி ஏமாறுகின்றோம்? சிறிய வயதில் இருந்தே, சில விடயங்களை நம்பிக்கைகளை முக்கியமாக மூட நம்பிக்கைகளை சரியோ, பிழையோ என ஆராயவிடாது அப்படித்தான், அதில் நம்பிக்கை வைக்கத்தான் வேண்டும் எ நிர்ப்பந்திக்கபடுகின்றோம். நாமும் பெரியவர்களாக வந்தும் கூட, சரியே பிழையோ என சிந்திக்காமல் நம்பிக்கை வைத்து பிள்ளைகளையும் சுயமா சிந்திக்கவிடாது தடுக்கின்றோம். இப்படியான நம்பிக்கைகளை பயன்படுத்திக்கூட எத்தனையோ பேர் ஏமாற்றிப் பிழைக்கின்றார்கள்.

எந்த விடயம் என்றாலும் மற்றவர்கள் கூறுகின்றார்கள் என்று நம்பிவிடாத நாங்கள் சுயமாக எங்களுக்கு எது சரியெனப்படுகின்றது எ சிந்திப்போமேயானால் எந்த ஏமாற்றுவித்தைக்கும் அடிபணியாத தன்னம்பிக்கையை வளர்த்து வாழ்க்கையில் முன்னேறும் வழியை பின்பற்றுவோம்.

******************************************

"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் -

*61 SCARFAIR PATHWAY, SCARBOROUGH, ONT. M1B 4G2 என்ற விலாசத்திற்கு அல்லது wijey@ interlog.com என்ற விலாசத்திற்கு E-Mail ஐ எழுதி அனுப்பவும்.*


புதிய நிர்வாகத்தின் கீழ்

Markham / Sheppard பகுதியில்

NEW SPICELAND

☏ : 292-0086


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 93

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | ■ | | 2 |
| | ■ | ■ | ■ | ■ | 3 | 4 | |
| 5 | | 6 | | | ■ | ■ | |
| | ■ | | ■ | | ■ | ■ | |
| | ■ | ■ | ■ | 7 | | 8 | |
| 9 | | | | ■ | ■ | | ■ |
| | ■ | ■ | | ■ | 10 | | |
| ■ | 11 | | 12 | | ■ | | 13 |

**இடமிருந்து - வலம்**

1. ஐயப்பன் பக்தர்கள் செல்லும் இடம்
2. தைப்பதற்கு தேவையானது (வல-இட)
3. இடபம்
5. எதிர்பாராமல் நடப்பது
7. ஒரு செய்யுளின் அடி அடுத்த செய்யுளின் முதலாக வரும் பாட்டு
9. சோதனை
10. விருப்பம்
11 ஆண் பூனை
13. குற்றம் (வல - இட)

**மேலிருந்து கீழ்**

1. தருணம்
2. நறுமணம் பூசிய குச்சி
4. சுவை (கீழ் - மேல்)
6. மந்திரம் சொல்
7. நெருப்பு (கீழ் - மேல்)
8. உறங்க வைக்க பாடும் பாட்டு
12. ஒழுங்கு (கீழ் - மேல்)
13. பிரிவு (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "ஸ்பைஸ் லாண்ட்" இல் பாவிக்கக்கூடிய $15. $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் March 29, 99க்கு முன்னர் கிடைக்க வேண்டும்.
Address: **P.O.Box 37527, 31 Tapscott Rd., Scarborough, Ont. M1B 5P9**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ச | ந் | தி | ர | சே | க | ர் | ■ |
| ங் | ■ | ரு | ■ | ■ | ட் | ■ | தி |
| கீ | ர் | த் | தி | ■ | டெ | ■ | று |
| த | ■ | து | ■ | ■ | று | ன் | இ |
| ம் | ■ | ■ | தி | ற | ம் | ■ | ■ |
| ■ | ப | ர | ண் | ■ | பு | டை | வை |
| நீ | ■ | ■ | ண | ■ | ■ | வி | க |
| தி | ரு | வெ | ம் | பா | வை | ■ | றை |

**#92இல் வெற்றி பெற்றோர்**

1)K. Tharmaruban, Toronto
2) கலாவதி B., Mississauga



நியூ ஸ்பைஸ்லாண்ட்
5800 Sheppard Ave. E
Unit#16 Scarborough, Ont.

அவித்து அரித்த மா 1lb .53¢ 40 lb மேல் Free Delivery
கொத்து ரொட்டிக்குரிய ரொட்டி
Patty - Rolls - Cutlets - Puddings
இடியப்ப Machine
மின் தேங்காய் துருவி
✆ (416) 288-8177
E.Mail luxmy@gloimpex.com
Special Discount for Take-out / Restaurant & Caterers

# APPLEMORE AUTOMOTIVE

**DETAILING**
**Motor shampoo**
**Interior shampoo**
**Exterior wash & waxing**






**Repairs**
**safety certification**
**overall maintenance**
**under coating &**
**Rust proofing**

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு அழையுங்கள்

☎ [416] **285-4998**

முகவரி: **2500 LAWRENCE AVE. EAST, UNIT #11**
**SCARBOROUGH, ONT.** ( MIDLAND & LAWRENCE )



## OODAM MAINTENANCE WORKS

Janitorial Services ("Sanitation for the Nation")



* KITCHEN RENOVATIONS
*BATHROOM REVOVATION
*TILES
*PLUMBING
>Railing >Fencing >Welding



Free Estimates

Pl. Call: Thamby - TEL./Fax: (416) **638-2796**

18 Brantley Cres. Downsview, NorthYork, M3J 1X5


## வாகனத்தின் சில்லின் (Tire) காற்றை கூட்டி, குறைத்து வைப்பதன் நன்மை தீமை என்ன?



வாகனங்களின் சில்லுக் காற்றை நாம் ஒரு பொருட்டாக கருதுவதேயில்லை. சில்லில் முழுக்காற்றும் இல்லை என்ற வேளையில் தான் அதைப்பற்றி யோசிக்கவே தொடங்கிறோம். மாதத்தில் ஒரு தடவையாவது காற்றின் அமுக்கத்தை அளந்து கூடியோ அல்லது குறைந்தோ இருந்தால் அந்த வாகனத் தயாரிப்பாளர்களின் குறிப்பிட்ட அளவை பார்த்து அதன்படி அந்த அளவிற்க்கு எப்போதும் காற்றின் அமுக்கத்தை சரிசெய்வது பல நன்மைகளை எங்களுக்கு அளிக்கிறது.

நாம் காற்றின் அமுக்கத்தை குறைத்து வைத்துக்கொண்டு வாகனத்தை பாவிக்கும் போது சில்லின் மேலதிக உராய்வு காரணமாக சாதாரண அளவிலும் கூடிய அளவிலான எரிபொருள் அந்த வாகனம் பாவிப்பதை உணரலாம். அதைத்தவிர Tire ம் பழதடைவதை நீங்கள் உணரலாம். Tireம் மிகவிரைவாக தேய்வடைவதையும் நீங்கள் சாதாரணமாக உணரக்கூடியதாக இருக்கும். அதேவேளையில் காற்றின் அமுக்கத்தை கூட்டி வைப்பதாலும் தீமைகளே வருகின்றன. காற்றின் அமுக்கத்தைக் கூட்டி வைத்துக் கொண்டு வாகனங்களை பாவிக்கும் போது வாகனம் உதறலுடன் செல்வதை கவனித்திருப்பீர்கள் என்று நம்புகிறேன். கூடிய உதறல் காரணமாக joints களில் பாதிப்பு ஏற்ப்படலாம். ஆகவே உங்கள் வாகனங்களின் சில்லின் காற்று அமுக்கத்தை மாதம் ஒருமுறையாவது சரிசெய்து கொள்வதன் மூலம் பல நன்மைகள் உண்டு. தொடர்புகளுக்கு:- சோதீஸ் வேலை:(416)364-1116 அல்லது Cell(416)704 -1179


*We are entering 8 th year service in Scarborough.*



## Better Work ...
## Less Money

**N.T.E Auto Inc.**
New Trade Engineering

We service
EUROPEAN , JAPANESE & DOMESTIC cars.
we are not just a Dealership.

**" FULLY LICENSED CLASS 'A' MECHANICS ON DUTY "**


We will reduce the worry and expense of maintaining your car by offering:

- Mechanical, Auto Electrical Repairs
- *Air Conditioning Service & Repairs*
- Mechanical Safety Inspection & Certification
- Minor & Major Repairs on European, Japanese & Domestic Cars
- Specializing in BMW
- Parts - repairs rather than replace when possible
- Free Estimates

**என். ரி. ஈ. ஒட்டோ இங்.**

**AUTO INC.**
New Trade Engineering

151 NANTUCKET BLVD, UNIT: 12
SCARBOROUGH, ONT.
☎ (416) 750 - 1573
SIVABALAN






# SCARBOROUGH NISSAN

NISSAN

*SALES - SERVICE - PARTS - BODY SHOP*

புதிய அல்லது தரமான பாவித்த NISSAN, HONDA, TOYOTA மற்றும் இதர வாகனங்கள்




* *Low & Easy Financing*
  (மலிவானதும் இலகுவானதுமான கடன் வசதி )
* *Low Insurance Arrangements*
  (மிகக்குறைந்த காப்புறுதி பெற்றுத்தரப்படலாம்)
* *Best Trade in Values*
  (உங்களுடைய கார்களுக்கு சிறந்த பெறுமதி தரப்படும்)
* *Best Discount in Town* (நகரிலே சிறப்பான மலிவு விலை)
* *Best Leasing Programs*

*FINANCING AVAILABLE FROM* **4.5%**

உங்கள் அனைத்து வாகன தேவைகளையும், வாகனம் வாங்குவதற்கான அறிவுரைகளுடனும் நம்பிக்கை நாணயம் உத்தரவாதத்துடனும் பெற்றுகொள்ள நாடுங்கள்

**For your best deal**
**Call or Visit**

1941 Eglinton Ave. E. (At Warden)






**Sugu Velupillai**
Sales & Leasing Consultant

☎: (416)**751-3511**/24 Hrs Pager: **632-5950**/ Cell: 716-6014

# ஆரோக்கிய வாழ்வு (29)



- N. செல்வசோதி

**மந்தத் தன்மை**

மந்தத் தன்மையை இருவகையாகப் பிரிக்கலாம். ஒன்று பிறவியிலேயே குழந்தைகள் மக்காகப் பிறப்பது. மற்றது இடையிலே பலவேறு காரணங்களால் மந்தத் தன்மை அடைவது. இந்த இரு நிலைகளையும் யோகாசனம், பிராணாயாமம் என்பனவற்றால் முழுமையாக நிவர்த்தி செய்ய முடியும்.

3000 ஆண்டுகள் வாழ்ந்த முனிவர் திருமூலர் ஆண், பெண் கூடக்கூடாத நாட்களில் கூடி அதனால் பிறக்கக்கூடிய குழந்தைகள் மந்த குணம் மற்றும் அங்கவீனமுள்ள பிள்ளைகளாகவும் பிறக்கின்றனரென்று கூறியுள்ளார். இக் குறையை தினமும் காலை, மாலை யோகாசனம், பிராணாயாமம் செய்வதால் மாத்திரம் போக்க முடியும் என்று கூறியுள்ளார்.

அடுத்து இடையிலே உடலானது மந்தத் தன்மை அடைவது சோம்பேறித்தனம், சுறுசுறுப்பு இல்லாமை என்றுகூட சொல்லலாம். இது எதனால் ஏற்படுகிறது. தவறான உணவு முறைகள், குடிப்பழக்கம், குடும்ப சூழ்நிலைதான் காரணம் என்று பண்டைய நூல்கள் கூறுகின்றன. அளவுக்கு அதிகமாக சாப்பிடுவது, அடிக்கடி பெண் இன்பத்தை நாடுவது. இவற்றால் மந்த குணம் ஏற்படுகிறது.

மாமிச உணவு, பழைய புளித்த உணவுகள், கெட்டுப்போன உணவு, சுய இன்பம், இரவில் அதிக நேரம் விழித்தல். இவற்றாலும் மந்தத் தன்மை ஏற்படுகிறது.

எனவே காலை மாலை குறைந்தது 20 நிமிட நேரம் யோகாசன பிராணாயாம பயிற்சி செய்வதால் மேற்கூறப்பட்ட மந்தத்தன்மையை ஒழித்து விடலாம். இது அனுபவரீதியான உண்மை.

**மலச்சிக்கல் ஏன்?**

சமைத்த உணவுகளையே அதிகமாக சாப்பிடும் பழக்கமுள்ளவர்களே அதிகமாக மலச்சிக்கலில் சிக்கித் தவிக்கின்றனர். எல்லா நோய்களுக்கும் அடிப்படைக் காரணம் மலச்சிக்கல்தான். பச்சைக் காய்கறிகள் பழங்கள் முதலியவற்றை நாளாந்த உணவில் சேர்த்துவந்தால் மலச்சிக்கலிலிருந்து விடுபடலாம். அத்துடன் சுத்தமான நீரை கூடியவரை அருந்தி வருபவர்களுக்கு மலச்சிக்கல் வரவே வராது.

மேலும் யோகாசன பயிற்சி தினமும் செய்து வரவேண்டும். குறிப்பாக தனுராசனம் சர்வாங்காசனம் உட்டியான என்பன செய்துவந்தால் மலச்சிக்கலிலிருந்து நிரந்தர விடுதலை பெறலாம். -நன்றி யோகக்கலை


**************************

# Neelam SILK

வட அமெரிக்காவில் உயர்ந்தரப் பட்டுப் புடவைத் தெரிவிற்கு ஓர் சிறந்த புடவை மாளிகை

## நீலம் சில்க்

அனைத்து மக்களின் அன்பான நல்லாதரவுடன் 8வது ஆண்டில் வெற்றிப் பாதம்பதிக்கும் நீலம்சில்க்

- கிரிஜாவின் சௌந்தர்யா ரை அன் டை (Tie & Die) சாறி
- கிரிஜாவின் சிம்போனி கிறேப் சில்க் சாறிகள்
- கிரிஜாவின் பிரதீபா 2 கலர் தாவணி ரிசு சேலைகள்
- கிரிஜாவின் சுவாயம்வர் ரிசு (Custom Made Special Jari)
- மினி அபூர்வா சேலைகள்



கோலம், ரங்கோலி, அபூர்வா, காஞ்சியின் புதிய டிசைன்கள். இவை மட்டுமல்ல இன்னும் பலவித தெரிவுகள் "நீலம் சில்க்"

"தமிழர் மத்தியில் ஓர் தரமான பட்டுப்புடவை மாளிகை"

1453 GERRARD STREET EAST
(Indian Bazzar)

CALL: (416) 778- 7455
FAX: (416) 778-8484



# யோகாசன வகுப்பு

கனேடிய இலங்கை பட்டதாரிகள் சங்கத்தின் சார்பில் கடந்த 3 வருடங்களாக அனுபவமிக்க ஆசிரியரால் பிரதி ஞாயிறுதோறும் காலை 7:30 மணிக்கு Markham /Ellesmere இற்கு அருகாமையில் வோபன் கொலிஜியேற்றில் (Woburn Collegiate) நடாத்தப் பட்டு வருகின்றது.

மேலதிக தொடர்புகளிற்கு - சத்தி: 291-5853


# யாதும் ஊரே யாவரும் கேளிர்



(14) -கலகலப்பு தீசன்

தலைக்குமேல் வந்தபின்னர் வழக்கறிஞரையோ.....அல்லது...... உதவி செய்ய முனைந்தோரையோ.. குறை கூறுவது மட்டுமல்லாமல், தனது வழக்கில் பிழையான தீர்ப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது.



இளைஞர்களுக்கான (குறிப்பாக 18 வயதுக்கு உட்பட்டோர்) சட்டங்களிலும் குடிபோதையில் கார் ஓடுபவர்களுக்குமான சட்ட விதிகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.


குற்றவியலில் நம்மவர் சட்ட உதவிப்பணம் வழங்கப்படாத பட்சத்தில் தமது சொந்தப் பணம் செலவழித்தே... தமது வழக்கை... வாதாட வேண்டியுள்ளது. வழக்கறிஞர்..... தேவையில்லை... எனக்கு.... ஆங்கிலம்.... தெரியும்..... நானே... எனது வழக்கை... பேசுவேன் என்பவர்களும் உண்டு.

"சட்டம்.. ஒரு கழுதை... அது... முன்னாலும்... உதைக்கும்... பின்னாலும் உதைக்கும் என்ற பழமொழி... ஞாபகத்தில் வருகிறது.



சட்டப்பிரச்சினை... என்று வந்தால் நீதி மன்றம் என்று.... சென்றால் உரிய சட்ட ஆலோசனை... பெறாமல்... நீங்கள் நீதிமன்றம் செல்லலாமா?

**அடிமேல்.. அடி... அடித்தால்**



நீதிபதி: உங்கள்... கணவர்.. உங்களை... அடிப்பதாகக் கூறினீர்கள்... எப்போது அடிப்பார்...
பெண்: குடிக்கும் போது... மட்டும் தான்
நீதிபதி: சரி... எப்போது குடிப்பார்.
பெண்: ஒவ்வொருநாளும்... குடிப்பார்....


அடிக்கிற கைதான் அணைக்குமா?


# ஞானம்ஸ் ஸ்ருடியோ

Introducing 1Hour Photo Lab: 3X5 & 8X12
Professional Photographer - கதிர்
☎: (416) 750-8118
2425 EGLINTON AV. E. UNIT 3
KENNEDY/ EGLINTON, SCARBOROUGH



# ELECTRICAL REPAIRS




உங்களிடமுள்ள சகல விதமான ரெலிவிசன்கள் ரேடியோக்கள் வீடியோக்களை குறைந்த செலவிலும்,சிறந்த முறையிலும் குறிப்பிட்ட நேரத்திலும் திருத்திக் கொள்ளநாடுங்கள்

முருகதாஸ் - ☎ 261-6883



# TV & VCR




ALL MAKES- TV'S, VCR'S
CAMCORDERS, STEREOS
MOST REPAIR DONE IN YOUR HOME
FAST SERVICE



Pl Call.: MAHENDRAN B.Sc. Exp. Tech. (416) 286-8990

# இதயம் ஒரு இயந்திரம்

-ஜோதிட விஞ்ஞானி, வைத்திய கலாநிதி, பேராசிரியர் C.S.S. சோமசுந்தரம்



**புது ஆட்கொல்லி**

நாம் தினசரி பத்திரிகைகளில் "பிரபல டாக்டர் திடீரென்று மோட்டாரில் போகும்போது இறந்தார்; நிர்வாகி நடக்கும் போது இறந்தார்; நீதிபதி கோர்ட்டிலேயே சாய்ந்தார், ஆசிரியர் கற்பிக்கும்போது திடீரென மயங்கினார் என்றெல்லாம் செய்திகளை படிக்கும்போது மனிதனுடைய உயிர் இவ்வளவு சீக்கிரமாகப் போகிறதே என்று ஆச்சரியப்படுகிறோம் அல்லவா? அணுகுண்டு யுகத்தில் விஞ்ஞான ஆராய்ச்சி செய்யும் மனிதனுடைய உயிர் அணுவினும் அணுவைப்போலக் காற்றில் பறக்கிறது என்பதற்கு இதைவிட அத்தாட்சி வேறென்ன வேண்டும்?

இந்தப் புது "ஆட்கொல்லி" உபாதைக்கு ஆங்கில வைத்திய நிபுணர்கள் கரோனரி த்ரோம்பாஸிஸ் (Coronary Thrombosis) என்னும் பெயர் வைத்தார்கள். இதுவா இவ்வளவு சீக்கிரம் கொல்வது? ஆம்! உண்மை தான். இவ்வளவு பெரிய பெயர் கொண்ட நோய் வேறொன்றுமில்லை. இருதய நோய்தான். எத்தனையோபேர் இருதய நோயால் வருஷக் கணக்காகக் கஷ்டப்படுகிறார்களே! இவ்வளவு சீக்சிரம் ஒரே வினாடியிலே இறந்து போவதில்லையே என்று பலர் கேட்கலாம்.

**ஒரு வகை** இருதய நோயிலும் இது ஒரு வகை. நமது மார்பின் இடப்பக்கம் வைத்துக் கவனியுங்கள். டக்டக்கென்று இரவு பகல், கடிகாரம் அடிப்பதுபோல அடித்துக் கொண்டிருக்கும். இதுதான் இருதயத் துடிப்பு. இது நின்றால் அவ்வளவுதான். இருதயத்திற்கு இரத்தம் வரும் குழாய் மூலம் இரத்தம் வருவது தடைப்பட்டு நின்றால் இருதய ஓட்டம், துடிப்பு, நிற்க வேண்டியதுதானே! இதுதான் ஆட்கொல்லியாகிய கரோனரி த்ரோம்போஸிஸ். இந்த நோயைப் பற்றி ஆராய்ச்சி செய்ய பிரபல ஆங்கில டாக்டர் D.A. ஸ்மித் கூறியிருப்பதாவது: "ஓய்வில்லாமல், அவசரமாகச் சாப்பிடுவது, இரவுகளில் நீண்டநேரம் கண்விழித்திருப்பது, ஆகியவைகளால் நரம்புத்தளர்ச்சி, இருதய நோய், இருதயப்புண் ஆகியவை ஏற்பட்டு ஆட்கொல்லி நோயாக மாறுகிறது."

இருதயத்திற்கு இரத்தத்தை அளிக்கும் இரத்தக் குழல் அடைத்துக் கொள்வதால் திடீரென்று இருதய இயக்கத்தை நிறுத்தி ஆளைக் கொன்றுவிடுகிறது அல்லவா? சாதாரணமாக ரத்தக் குழலில் அடைப்பு இருந்தால் பொறுக்க முடியாதவலிதான் இருக்கும்! இதையே ஆபரேஷன் மூலம் சரிப்படுத்தலாம் என்று டாக்டர் P. ராபர்ட், P. க்ளோவர், அமெரிக்க வைத்திய நிபுணர்கள் கூறி விவரித்திருக்கிறார்கள்.

**முக்கிய கவனிப்பு**

இதயம் பலவீனமாக இருக்கிறது; நோய் ஏற்பட்டுவிட்டது என்று அறிந்துகொள்ளும் போது சிலர் மிகவும் அதிர்ச்சியடைவார்கள். ஆயினும், மனத்தைத் திட்டப்படுத்திக் கொள்ள வேண்டும். நோயின் நிலைமைக்குத் தக்கவாறு வாழ்க்கை முறையிலும் பழக்க வழக்கங்களில் அனுபவங்களிலும் அவசியமான மாறுதல்களைச் செய்து கொண்டு வேலையில் மீண்டும் ஈடுபடவேண்டும். எப்பொழுதும் நோயைப் பற்றியே எண்ணிக் கொண்டிருத்தலும் கவலைப்படுதலும் இதயம் நின்றுவிடுமோ என்று நினைப்பதும் கெடுதி செய்யும். அவை நோய் குணமாவதைத் தாமதப்படுத்தும்; மன அமைதியை அழிக்கும். இருதய நோயுள்ளவர்கள் நிதர்சனமாக வாழவேண்டும். அளவாக, அதிகக் களைப்படையாமல் இருக்கும்படி வேலை செய்தால்; அது அவர் ஆயுளை நீடிக்க வைக்கும்.

(தொடரும்)

## சிந்தனைத் துளிகள

(1ம் பக்க தொடர்ச்சி)

உதாரணமாக ஒரு பந்து மேல் வீசும்போது கீழே வருகிறது. இந்நிகழ்வு எங்கிருந்தாலும் நிகழ்ந்தே தீரும். ஒரு நாளும் தடுக்கமுடியாது.

எனவே கட்டுப்பாடுகள் எங்களிற்காக நாங்கள் உருவாக்கப்பட்டதும், இயற்கையாக உருவாக்கப்பட்டதும் ஆகும்.

உலகம் உருள்கிறது. இயற்கையை கட்டுப்பாடு நிறுத்தமுடியுமா? யார் ஒருவர் நியாயமான கட்டுப்பாட்டை மீற எத்தனிக்கிறாரோ அல்லது இது பித்தலாட்டம் என வாதிட முற்படுகின்றாரோ அவர் தன்னைத தானே இகழ்த்திக் கொள்கிறார் என்பதே அதன் உண்மை. -அரசன்-


நான் ஒரு வழக்கறிஞர் இல்லை




குடிவரவுச் சட்டம்
Immigration Law

குற்றவியல் சட்டம்
Criminal Law

குற்றவியல் தண்டனை பெறுவதனால்....



உங்கள் வதிவிட உரிமை
- Permanent Resident
குடியுரிமை
- Citizenship
குடும்ப ஒன்றிணைவு
- Family Sponsorship
பாதிக்கப்படலாம்.



வாகன விபத்தில் பாதிக்கப்பட்டீர்களா?

அடுத்து செய்யவேண்டியது என்ன?




முதலில் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்...

பின் இவரை அழையுங்கள்...

எஸ்.கே. தீசன்
(416) 631-6322



YARLCAN STEAM CLEANING



உங்கள் சகலவிதமான Cleaning தேவைகளுக்கும் அழையுங்கள்
மோகன்
Tel: 724-9085
Pager : 600 0335
Cell.: 721-9709



இனவாதத்திற்கு எதிரான தமிழர் அமைப்பு
நடத்தும்
இனவாதமும் வெறுப்புணர்வுக் குற்றங்களும்
பற்றிய
கருத்தரங்கு

காலம்:- சனிக்கிழமை, மார்ச் 20, 1999
நேரம்:- மு.ப. 9:30 - பி.ப. 2:30 வரை
இடம்:- ஸ்காபரோ நகரசபை மண்டபம்
150 புரோ ரைவ் (150 Borough Drive)
ஸ்காபரோ ரவுன் சென்றருக்கு அருகில்

கடந்த பல ஆண்டுகளாக இனவாதத்திற்கு எதிரான அரச அமைப்புகளில் கடமை புரிவோர் கலந்து கொண்டு கருத்துரை வழங்குவர்.

கனடாவுக்குப் புலம் பெயர்ந்த எம்மிற் பலர் புதிய சூழ்நிலையில் இனவாதத்தைப் புரிந்து கொள்ள இயலாமலோ அல்லது பாடசாலை, தொழில் புரியுமிடம் மற்றும் வதிவிடங்களில் இனவாதப் பாதிப்புக்குள்ளாகிய நிலையிலும் அதனை எவ்வாறு எதிர்கொள்வது எனத் தெரியாது தவிக்கின்றோம்.

வாருங்கள்! இனவாதத்தை அறிவோம்!! பின்னர் சரியான வழியில் இனவாதத்தை எதிர்கொள்வோம்!!!

விபரங்களுக்கு: (416) 463-7647
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
நண்பகல் உணவு வழங்கப்படும்



TAMIL INSURANCE CLAIMS CONSULTANT
தமிழில் இலவசஆலோசனை

வாகன விபத்து அல்லது வீடு விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்?

- தகுந்த ஆலோசனை
- சட்ட உரிமைகள்
- விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடு
- உரிய நஷ்டஈடு
- மற்றைய இழப்பீடு
- மற்றும் நுணுக்கமான ஆலோசனைகளும், அறிவுரைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் சிறந்தமுறையில் பெற்றுக்கொள்ள

ரவி நடராஜா (12 வருட கால அனுபவமுள்ளவர்)
தொடர்புகொள்ளுங்கள்: TEL: (416) 245-6555
FAX: (416) 245-7766
2095 Weston Rd., #201 (South of HWY 401),
Toronto, Ont. M9N 1X7

# விளையாட்டுத் தகவல்கள் (26)

எஸ். கணேஷ்



## வெற்றி நடைபோடும் தமிழர் உதைபந்தாட்ட அணி

எமது நாட்டில் அல்லல் உற்று புகலிடம் கேட்டு வந்த நம்மை, வரவேற்று வதிவிடம் தந்த இந்த கனடா மண்ணின் புகழை உயர்த்த பல் துறைகளிலும் எம் தமிழர் கங்கணம் கட்டி வருகின்றனர். கனடா நாட்டின் பெயரை உயர்த்த எமது தமிழர் சமூகம் முற்படும் பொழுது, எமது தமிழ் சமூகத்தின் பெருமையும் உலகத்தில் எடுத்தியம்பப்படுகிறது.

சென்ற விளம்பரம் இதழில் கனடாவில் National Award எடுத்த மொன்றியலை சேர்ந்த செல்வன் ஜெயகரனின் திறமைகளைப் பார்த்தோம். இவ் இதழில் எமது தமிழ சமூகத்திற்கு பெருமை சேர்க்கும், முதன் முதலாக Indoor உதைபந்தாட்டத்தில் பங்கெடுக்கும் Canadian Tamils உதை பந்தாட்ட அணியினரின் திறமையை பார்ப்போம்.

கடந்த சில வருடங்களாக Outdoor இல் தமிழர்கள் உதைபந்தாட்ட அணி விளையாடி பல பெருமைகளை சேர்ந்துள்ளது. இவ்வருடம் முதன் முதலாக Indoor (உள்அரங்க உதைபந்தாட்டத்தில்) பங்கெடுத்த இவ் அணி படிப்படியாக முன்னேறி சென்ற கிழமை முதலாவது இடத்திற்கு வந்துள்ளது.

இலங்கையின் பல பாகத்திலும் உள்ள கழகங்களில் விளையாடி புகழ்பூத்த இளம விளையாட்டு வீரர்களை Torontoவில் தெரிவு செய்து இவ் அணி இவ்வருடம அமைக்கப்பட்டது. சில மாதங்களுக்கு முன்பு இவ் அணியின் பெறுபேறுகளைப் பற்றி விளம்பரம் இதழில் எழுதி இருந்தேன். அப்போது இவ் அணி League இல் முன்னும (3வது) இடத்தில் இருந்தது. அச் சமயம் இவ் அணி முன்னேறி முதலிடத்திற்கு வரும் என்று குறிப்பிட்டிருந்தோம். நாம் குறிப்பிட்டது போல் இவ் அணி தமது திறமையை நிரூபித்தது.

இவ் அணியை கொக்குவில் இந்து கல்லூரியின் முன்னைநாள் விளையாட்டு வீரர் ஆன திரு. பொன்னுத்துரை ரஞ்சன் அவர்கள் தனது சொந்த முயற்சியால் அமைந்தார். இது ஒரு தனிநபரின் முயற்சி என்பது பாராட்டப்படக்கூடியது. இவருக்கு உறுதுணையாக United Star விளையாட்டு கழக வீரர் ஆன திரு. எஸ். சிவா அவர்களும் தற்போது இவ அணியின் Manager ஆக கடமையாற்றுகிறார்.

யாழ் நகரில் தமிழ் ஈழ உதைபந்தாட்ட அணியினர் அணியும் அதே நிற (மஞ்சள், சிவப்பு) சீருடை (Jersey) (Uniform) அணிந்து Toronto வில் பல வேறு நாட்டு விளையாட்டு வீரர்களின் கழகங்களை எல்லாம் தோல்வி அடைய செய்யும் இவ் அணி பல வெற்றிகளை குவித்து வருகின்றது. இதுவரை 18 ஆட்டங்களில் கலந்து கொண்டு (15) ஆட்டங்கள வெற்றியும் (2) ஆட்டங்கள் தோல்வியும் (1) ஆட்டம் வெற்றி தோல்வியின்றியும், மொத்தமாக 46 புள்ளிகளை பெற்று முதலிடத்தில் உள்ளது. Indoor League இல் பல வருடங்களாக விளையாடும் கறுப்பு இனத்தவ Islanders அணியையும், கிரேக்க இனத்தவ Olympic அணியையும் மண் கவ்வச் செய்துள்ளது.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் இவ் வருடம் 3 புதிய சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. முதலாவதாக முதல் வருடத்திலேயே முதல் இடத்தை எட்டிப் பிடித்த ஒரே இரு அணியாகவும், இரண்டாவதாக League அதிகூடிய தோல்விகளை போட்ட முதலாவது அணியாகவும் (145 கோல்கள்) மூன்றவதாக Toronto Blues அணியை சேர்ந்த முன்னணி வீரர் ஆன கங்கா அவர்கள் (40 கோல்களை போட்டு சகல ஏனைய கழக வீரர்களிலும் பார்க்க முதலாவது இடத்திலும் (Highest Goal Scorer) ஆகிய மூன்று சாதனைகளை நிகழ்த்தி உள்ளனர். 2nd Highest Scorer N. பாபு (Unite வி. கழகம்) (28) Goals. League இல் முதலாம் இரண்டாம இடததுல தமழ வீராகள ஆன கங்கா, பாபு ஆகியோர் உள்ளனர் என்பது பெருமைப் படக் கூடிய விடயமாகும்.

**March 5th திகதி வெளியிடப்பட்ட புள்ளி விபரத்தை பார்ப்போம்.**

Indoor Soccer League - Mens

| TEAM | P | W | L | T | F | A | Pts |
|---|---|---|---|---|---|---|---|
| CDN. TAMIL | 17 | 14 | 2 | 1 | 129 | 63 | 43 |
| ISLANDERS. | 17 | 13 | 1 | 3 | 108 | 40 | 42 |
| G.W.O. FORCE | 17 | 12 | 3 | 2 | 96 | 63 | 38 |
| OLYMPIC FLAME | 17 | 11 | 5 | 1 | 103 | 61 | 34 |
| LIBERTY BALL | 16 | 9 | 5 | 2 | 74 | 43 | 29 |
| ALL STARS | 17 | 8 | 9 | 0 | 78 | 69 | 24 |
| THE DUKES | 17 | 7 | 7 | 3 | 73 | 66 | 24 |
| VANIER VIKINGS | 17 | 7 | 9 | 1 | 82 | 84 | 22 |
| CHILI BALLS | 17 | 5 | 11 | 1 | 45 | 108 | 16 |
| BULLDOGS | 16 | 4 | 12 | 0 | 50 | 92 | 12 |
| STALLIONS | 17 | 2 | 14 | 1 | 75 | 138 | 7 |
| AVENGERS | 17 | 1 | 15 | 1 | 54 | 151 | 4 |

Torontoவில் உள்ள சகல தமிழ் உதைபந்தாட்ட கழகங்களில் இருந்தும் திறமையான வீரர்களை உள்ளடக்கிய Canadian Tamils அணியினரின் பெயர் பட்டியல்

எஸ். புவாட் (Captin) - கொழும்பு வி. கழகம்
எஸ். சங்கர் (Coach/Player) - கொழும்பு வி.கழகம்
ரி. ஜெரோன் - கொழும்பு வி. கழகம்
என். பாபு (Vice Captin) - அரியாலை வி. கழகம்
ரி. கங்கா - ரொரன்ரோ (Blues) வி. கழகம்
ரி. மகேந்திரன் (Mike) - யாவிஸ் வி. கழகம் (Goal Keeper)
என். பாபு - United வி. கழகம்
R. Joy - United வி. கழகம்
ரி. அந்தனி - United வி. கழகம்
வி. பகிரதன் - யாவிஸ் வி. கழகம்
எஸ். Steve - Panthers வி. கழகம்
வி. வேணு - Panthers வி. கழகம்
கே. சீலன் - குமரன் வி. கழகம்
என். கிருபா - Islanders வி.கழகம்
ரி. கேதீஸ் - E.N.A. வி. கழகம்
M. ஏரிக் - Singing Fishy வி. கழகம்




# நியூ ராஜன் சலூன்

உங்கள் அழகு கூந்தலை மேலும் அழகுபடுத்த
நகரில் புதியதோர் நிறுவனம்
✂ பெரியவர்கள் - $9.00
✂ சிறுவர்கள் - $7.00
✂ வயது வந்தவர்களுக்கு விஷேட கழிவு
செவ்வாய் - ஞாயிறு வரை 10:30Am-8:00Pm
ராஜா - ✆: (416) 741-1049
Pager (416) 739-2393
5010 Steeles Ave. W., #19, (Kipling/Steeles)



Pillayar Traders

SRILANKAN . EAST & WEST INDIAN
GROCERIES & TEXTTILES
3630 LAWRENCE AV. E., SCARBORO
☎ : 438-7746


## விஷேச போட்டி இல. 83

பூமி, அறிஞன், குழந்தை, நெருப்பு ஆகிய 4 சொற்களுக்கும் அச்சொற்களின் ஒத்த கருத்துக்கள் உடைய 4 சொற்களைத் தருக

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| த | வு | க | ம | அ | கி | ல | ம் |
| ழ | ய் | சே | தை | க் | வி | ப | ய |
| ல் | ழ | அ | மே | கி | ழ | வி | ல |
| ன | நீ | கா | சி | னி | ச | ர் | வ |
| க | வி | பு | சு | ன் | ந் | ழ | கு |
| ற் | ஞா | ல | ம் | ண | தி | ரை | ழ |
| றோ | ன | வ | ல | பு | யு | தே | வி |
| ன் | றோ | ன் | சா | நி | பி | ள் | ை |

மேற்காட்டப்பட்ட சதுரப்பெட்டிகளில் பல சொற்கள் தலை கீழாக, சீராக, இடம் வலமாக, குறுக்குப்பாடாக (diagonal). நாலு மூலை வழியாகவும் அமைந்துள்ளது. இவற்றை இனம்கண்டு பினவருவனவற்றிற்குரிய விடைகளை April 12, 99 ற்கு முன்னர் விளம்பர விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

**# 82ன் விடைகள்**

1. மலேசியா, மெக்சிகோ, பேரு, அல்ஜீரியா, சிலி, வெனுசுலா, சிம்பாவே, நைஜீரியா, எகிப்து, இலங்கை, இந்தியா, ஜமேக்கா

பரிசு பெற்றோர்:

1) ம. யோகநாதன், Toronto
2) ப. நிரஞ்சனி, N. York

**பரிசுகள்:** பிள்ளையார் ரேடர்ஸ் இல் பாவிக் கூடிய இரண்டு($15, $10) பெறுமதியான vouchers (இவற்றிற்கு cash value கிடையாது

**விதிகள்:** ஒருவர் எத்தனை முறையும் முயற்சிக்கலாம்.பிள்ளையார் ரேடர்ஸ்,விளம்பர ஊழியர்கள் பங்குபற்ற முடியாது. விளம்பரம் குழுவின் முடிவே இறுதியானது.


# கலைமகள் புத்தக நிலையம்

*சிறுவர்களிற்கான நீதிக்கதைகள்
*தமிழ்ப் புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பத்திரிகைகள்
*இலங்கை/இந்திய பத்திரிகைகள்
*குறுங்கதைகள், சரித்திரப் புத்தகங்கள்
*CREDIT LEVEL தமிழ் பாடப்புத்தகங்கள்
*கனடிய தமிழ்ப் பிரசுரங்கள் மற்றும் பலப் பல

துரித பணமாற்றுச் சேவை

595 PARLIAMENT ST.
TORONTO, ONT.
☎: (416) 944-1818

3238 Eglinton Ave., East
Scarborough, Ont.
☎: (416) 265-3605

3850 FINCH AVE. E. GO 1A
SCARBOROUGH,ONT.
☎: (416) 292-9319

2580 Sheppard Ave. #9,
Newin Centre Mall, Mississauga, Ont.
☎: (905) 306-0494


**மேலும் 5 ஆட்டங்கள் நடைபெற இருக்கின்றன.**

| | | | | |
|---|---|---|---|---|
| MARCH 18, 99 | 9 PM | CDN. TAMILS | - Vs | GWO FORCE |
| MARCH 25, 99 | 10 PM | " | - Vs | ALL STAR |
| APRIL 01, 99 | 9 PM | " | - Vs | CHILI |
| APRIL 08, 99 | 10 PM | " | - Vs | GWO FORCE |
| APRIL 15, 99 | 10 PM | " | - Vs | KUBERTY |

மேற்படி ஆட்டங்களை கண்டுகளிக்க அனைவரும் அன்பு அழைக்கப்படுகின்றனர். சகல ஆட்டங்களும Scarborough Soc Centre இல் நடைபெறும். (Warden / Eglinton) Warden Wood M இற்கு முன்பாக இருக்கும் Fair Fax Road இல் நடைபெறும்.

இக் கட்டுரையை நான் எழுதிக் கொண்டிருக்கும் போது Canad Tamils மீண்டும் ஒரு சாதனையை இன்று நிகழ்த்தி உள்ளனர். C அணியுடன் நடைபெற்ற ஆட்டத்தில் 18 கோல்களை அடித்து 18 என்ற கோல் அடிப்படையில் ஒரு ஆட்டத்தில் அதிகூடிய கோல் அடித்து முதலாவது அணி என்ற பெயரையும் எடுத்துள்ள இவ்வாட்டத்தில் என். பாபு (United வி.கழகம்) ஒரு ஆட்டத்தில் கோல்களை போட்டு ஒரு சாதனையும் நிகழ்த்தியுள்ளார்.

"வாழ்க எமது உதைபந்தாட்ட வீரர்கள்! வளர்க எமது திறமைகள்

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1931 ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான படங்கள்

–தொகுத்துத் தருபவர் - பரம்

### 1957


1. அம்பிகாவதி (A.L.S.)
2. அன்பே தெய்வம்
3. அல்லாவுதீனும் அற்புத விளக்கும்
4. ஆரவல்லி
5. இரு சகோதரிகள்
6. எங்கள் வீட்டு மகாலஷ்மி
7. [illegible]புக்கரசி
8. [illegible]மய சஞ்சீவி
9. சக்கரவர்த்தி திருமகள்
10. சௌபாக்கியவதி
11. தங்கமலை ரகசியம்
12. நீலமலைத் திருடன்
13. பத்தினி தெய்வம்
14. பக்த மார்க்கண்டேயா
15. பாக்யவதி
16. புது வாழ்வு
17. புதுமைப்பித்தன்
18. புதையல்
19. மகதலநாட்டு மேரி
20. மக்களை பெற்ற மகராசி
21. மணாளனே மங்கையின் பாக்கியம்
22. மணமகள் தேவை
23. மல்லிகா
24. மகாதேவி
25. மாயாபஜார்
26. முதலாளி
27. யார் பையன்
28. ராஜராஜன்
29. ராணி லலிதாங்கி
30. வணங்காமுடி


'மகாதேவி'- சாவித்திரியுடன்

இவ்வாண்டு 30 படங்கள் தமிழகத்திலிருந்து வெளிவந்தன. எம்.ஜி.இராமச்சந்திரன் கதாநாயகனாக நடித்த 'சக்கரவர்த்தி திருமகள்', 'ராஜராஜன்' 'புதுமைப்பித்தன்', 'மகாதேவி' ஆகிய நாலு (4) படங்களும், சிவாஜி கணேசன் நடித்த 'மக்களைப் பெற்ற மகராசி', 'பவளக்கொடி', 'புதையல்', 'மணமகன் தேவை', 'தங்கமலைரகசியம்', 'ராணி லலிதாங்கி'' 'அம்பிகாபதி, பாக்கியவதி'' ஆகிய எட்டு 8 படங்கள் வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு வந்த படங்களில் சில விஷயங்கள் குறிப்பாக சொல்லக் கூடியதாக உள்ளது. அதாவது தங்கமலை ரகசியத்தில், சிவாஜி அவர்கள் மௌனமாக நடித்து உணர்ச்சிகளை தன் முகபாவங்களால் நடித்து காட்டி வெற்றி பெற்ற படம்.

'சக்ரவர்த்தி திருமகள்'- கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனுடன்



இந்தக் காலக்கட்டத்தில் சிவாஜி, காதல் காட்சிகளில் அவ்வளவு சிறப்பாக நடிப்பதில்லை என்றொரு குறைபாடு. இதை பிழையென நிருபிப்பது போல 'புதையல்' இல் வந்த 'விண்ணோடும் முகிலோடும்" என்ற பாடலிற்கு சிவாஜி, பத்மினியுடன் மிகச்சிறப்பாக நடித்துள்ளார்.

இந்த ஆண்டு வந்த படங்களுள சிறந்ததாக தெரிவு செய்யப்பட்ட படம 'எங்க வீட்டு மகாலஷ்மி', இதே படத்தில உபநடிகராக நடித்ததிற்காக தங்கவேலு அவர்களை சிறந்த உபநடிகராகவும், சிறந்த நடிகராக சிவாஜி கணேசன அவர்களை 'மக்களைப் பெற்ற மகராசி' சிறந்த நடிகையாக சாவித்திரி (வணங்காமுடி) அவர்களும் சினிமா ரசிகர்கள் சங்கத் (சென்னை)தால் தெரிவு செய்யப்பட்டது.


41. 'ராஜராஜன்'- பத்மினியுடன்


'புதுமைப்பித்தன்'- டி.ஆர். ராஜகுமாரியுடன்

## நான் வாழப் போகிறேன்

### சுவடு 27

-வீணை மைந்தன்

நாடகம் நடிப்பு இவற்றையே தனது இரு விழிகளாகப் போற்றிப் பாதுகாத்து வளர்த்தவர், வளர்ந்தவர் நடிகர் திலகம் என்பது அவருடைய வரலாற்றின் நிலையான பக்கங்கள் ஆகும். நாடகம் தாய் சினிமா சேய் என்று கூறுவார்கள். தற்காலத்தில் முன்பு போல நாடகக் கலை பேணிப் பாதுகாக்கப்படுதலும் இல்லை. நாடகத்தால் வாழ்க்கை நடத்துவோரும் இல்லாமல் அருகி வருகிறது.

இதற்கு பல காரணங்கள் கூறலாம். வளர்ந்து வரும் தொழில்நுட்ப வசதிகளும் வாழ்க்கையின் யதார்த்த நுகர் நிலை வசதிகளும் புதிய தலைமுறையினரின் கலாரசனையும் கலையுலகத் தொழில் முறை மாற்றங்களும் நாடகக்கலையை பல தூரம் பின்நிலைக்குத் தள்ளிவிட்டது. அன்றைய நாடகங்களின் புதிய பரிமாண அறிவியல் வெளிப்பாடே ரிவியில் தொடரும் 'சின்னத்திரை" அல்லது "குறுந்திரைப்பட" தொடர் காட்சிகளாகும். எனவே நாடக மேடைக் காட்சிகள் யாவும் சின்னத்திரைப் படங்களாக வடிவெடுத்துள்ளன. அப்படி சின்னத் திரையில் நடிப்பதானாலும் கூட நடிப்புப் பயிற்சி அவசியம் அல்லவா! ஆக இப்போதும் சரி அடுத்த தலைமுறைக் காலத்திலும் சரி நாடக அனுபவமும் நடிப்புப் பயிற்சியும் ஒரு நடிப்புக் கலைஞனுக்கு எவ்வளவு முக்கியம் என்பதை மனதில் கொண்டு நடிகர் திலகம் சொல்லிய அவரது விருப்பத்தை இங்கு வெளியிடுவது எதிர்காலக் கலைஞர்களுக்கு நலிந்து வரும் நாடக, நடிப்புப் பட்டறைகளுக்கு ஒரு ஊடக சக்தியாக உற்சாக மருந்தாகும் என நடிகர் திலகம் அவர்களின் நீண்டகால விருப்பத்தை இங்கு குறிப்பிடுகிறேன்.



சிலர் சொல்ல விரும்புவதை அடுக்கடுக்காக வார்த்தைகளில் வர்ணித்துச் சொல்லுவார்கள். சிலர் அதையே சுலமபாக முகபாவத்தில் காட்டிவிடுவார்கள். இந்த இரண்டையும் திறம்படச் செய்யக்கூடியவனே நல்ல நடிகன். வார்த்தைகளால் வர்ணிக்க மட்டும் தெரிந்து கொண்டு முகபாவம் காட்டமுடியாமல் திண்டாடினால் அதை நடிப்பென்று சொல்ல முடியாது. அதே போல முகபாவம் மட்டும் காட்டத் தெரிந்து சரியாகப் பேசத் தெரியாவிட்டாலும் அவரை நல்ல பயிற்சி பெற்ற நடிகர் என்று ஒப்புக்கொள்ள முடியாது.

நல்ல முறையில் நடிகர்களை உருவாக்க வழி செய்ய விரும்புகிறவர்கள் நாடக உலகில் இருந்து பயிற்சி பெற்றவர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். நாடகம்தான் நடிப்புக்கு நல்ல பயிற்சிக்கூடம். நாடகத்தின் மூலம் பல வேடங்களைத் தாங்கி அனுபவப்பட்டவர்கள்தான் திறமையாக நடிக்க முடியும். இம்மாதிரி நாடகங்களில் நடித்து பக்குவப் பட்ட பல நல்ல நடிகர்கள், நடிகைகள் நாட்டில் ஏராளமாக இருக்கிறார்கள். இவர்களை திருவாளர்கள் ஏ.வி.மெய்யப்ப செட்டியார். எஸ்.எஸ்.வாசன், ஸ்ரீராமுலு நாயுடு, நாராயண ஐயங்கார், நாகிரெட்டி, ஏ.எல்.ஸ்ரீனிவாசன் இன்னும் இவர்கள் போன்ற பெரும்படத் தயாரிப்பாளர்கள் அழைக்க வேண்டும். அவர்களுடைய திறமையை சோதித்துத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்போதுதான் பல புதுமுகங்கள் தமிழ்த் திரையுலகிற்கு வர முடியும். நான் ஏன் பெரும் படத் தயாரிப்பாளர்களைக் குறிப்பிடுகிறேன் என்றால், அவர்கள்தான் யாருடைய உதவியையும் எதிர்பாராமல் படத்தை எடுத்து முடிக்கக் கூடியவர்கள். ஆகவே அவர்கள் தான் இதற்காவன செய்யவேண்டும்.

இதைவிட்டுவிட்டு பயிற்சிக் கூடம் ஆரம்பித்து அதன் மூலம் நடிகர்களை உண்டாக்க விரும்புவது அவ்வளவு பயன் தராது. பயிற்சி பெறும்போது வெறும் பாடங்கள் படித்து விட்டால் மட்டும் நடிப்பு வந்துவிடாது. அதற்கு நல்ல அனுபவம் வேண்டும். கொஞ்சம் நாடக அனுபவமுடையவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மேலும் இம்மாதிரி பயிற்சியளித்தால் அவர்கள் நடிப்பில் மெருகேறும். அதைவிட்டுவிட்டு முற்றிலும் புதிய ஆட்களைக் கொண்டு வந்து பயிற்சியளித்தால் அது வெற்றி பெறும் என்று நான் நம்பவில்லை. சொல்லிக் கொடுத்து நல்ல நடன, இசைக் கலைஞர்களை உண்டாக்கி விடலாம். ஆனால், நடிப்பு அப்படியில்லை. உடம்பில் ஊறிக் கிடக்கிற உணர்ச்சிகளை எடுத்துக் காட்டும் உயர்ந்த கலை அது. ஆகவே அதற்கு ஆர்வமும், ஆசையும் சற்றே அனுபவமும் பெற்றவர்கள் தேவை. "வெட்கம் , வெட்கம்" என்று கூறுகிறார்களே அது நடிகனுக்கு இருக்கக்கூடாது. எந்தவிதப் பாத்திரத்தையும் வெட்கப்படாமல் ஏற்று நடிக்க வேண்டும். என் அனுபவத்தில் தெரிந்தவரை நாடக மேடை தான் புது முகங்களுக்கேற்ற பயிற்சிக்கூடம்.

பயிற்சி பெறும் நடிகர்கள் மற்ற நடிகர்களின் நடிப்பைப் பார்க்க வேண்டும். யார் யாரிடத்தில் சிறப்பான அம்சங்கள் என்பதை கவனிக்க வேண்டும். நாம் நடிக்கும் போது நமக்கே அது திருப்தி கரமாக இருக்கிறதா எனப் போர்க்க வேண்டும். அதோடு பலரிடம் நடித்தும் காட்ட வேண்டும். அப்போதுதான் உண்மையிலேயே நல்ல பயிற்சியும் அனுபவமும் உண்டாகும்.

வருங்காலத்தில் எனக்கு வாரிசாக விளங்கக்கூடிய இரண்டு கதாநாயகன்-கதாநாயகிகளை உருவாக்க நான் திட்டமிட்டுள்ளேன். நான் உருவாக்கும் நான்கு பேர்கள் சினிமாத் தொழிலில் இருக்க வேண்டும். அவர்கள் சிறந்த முறையில் பயிற்சியளிக்கப்பட்டு, கொடுத்த பாத்திரத்தை உணர்ந்து உணர்ச்சிகரமாக நடிக்கக்கூடியவர்களாக வேண்டும். நன்றாக நடிக்கத் தெரிந்தவர்கள் அழகில்லாமலும் இருக்கக்கூடாது. என்னால் உருவாக்கப்படும் வருங்கால நட்ச்த்திரங்கள் இம்மாதிரி எல்லா விதத்திலும் சிறப்பாக விளங்கவேண்டும் என்பது என் ஆசை. நான் அவர்கள் யார் என்று இப்போது அறிவிக்கும் நிலையில் இல்லை. இன்னும் அவர்களை நான் தெரிந்திருக்கவில்லை. விரைவில் நல்ல நான்கு கலைஞர்களைத் தெரிந்தெடுத்து, பயிற்சியளிக்கப் போகின்றேன். அடுத்த தொடரில்...


**SNR OPTICAL**

அனைத்து டிசைனர் பிறேம்ஸ் மற்றும் கண்ணாடிகள் (Designer Frames & Sunglasses) மேலும் சகல திருத்த வேலைகள் சிறந்தமுறையில் அனுபவமிக்கவரால் செய்துகொள்ள தொடர்புகொள்ளவும். *அரசாங்க உதவியில் உள்ளவர்கள், மற்றும் அனைத்து காப்புறுதிகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

* 60 வயதிற்கு மேற்பட்டவர்களிற்கு சில வசதிகளுமுண்டு.

ரதி - FRAME CONSULTANT (Robert Optician)

☎: (416) 332 9995

# MANCHULAA FASHION

## 7th ANNIVERSARY GRAND SALE

| | நடைமுறை விலை | நம்பமுடியாத மலிவு விலை |
|---|---|---|
| England London Skirt | 15.00 | 5.99 |
| England London Shirt | 25.00 | 14.99 |
| England Skirt & Blouse | 65.00 | 39.99 |
| England Newborn Dress | 25.00 | 14.99 |
| England Ladies Dress | 50.00 | 29.99 |
| England Pants | 50.00 | 29.99 |
| England Man Shirt | 25.00 | 14.99 |
| Man T. Shirt New Design | 25.00 | 14.99 |
| Boys Shirt | 15.00 | 9.99 |

## இலவசம்! FREE!

1 பனாரஸ் சாறி வாங்கினால் ........ 1 பிளவுஸ்
5 பெல்கம் சாறி வாங்கினால் ........ 1 சாறி
6 நைலெக்ஸ் சாறி வாங்கினால் ...... 1 சாறி
10 இந்தோனேசியா கவுண் வாங்கினால் . 1 பற்றிக் கவுண்
5 பஞ்சாபி சூட் வாங்கினால் ........ 1 சிறுமிக்கான பஞ்சாபி சூட்
10 சாப்பாட்டுத்தட்டு வாங்கினால் ..... 1 தட்டு
$150 டொலர்களுக்கு மேல் எவர் சில்வர் பொருட்கள் வாங்கினால் .......... 1கேக் அவுண்

இலவசம்


### நீங்களும் அதிஷ்டசாலியாகுங்கள்!

இவ் மலிவு விலையில் பங்கு கொள்ளும் அனைவருக்கும் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு அதிர்ஷ்டசாலியாகும் வாடிக்கையாளர்கள் மூவருக்கு பரிசு வழங்கப்படும்.

1வது பரிசு பனாரஸ் சேலை
2வது பரிசு மைசூர் சில்க்
3வது பரிசு கேக் தயாரிக்கும் அவுண்

## MANCHULAA FASHION

5818 SHEPPARD AVE. E., UNIT 203,
SCARBOROUGH, ONTARIO




Tel: (416) 297-9875

மலிவு விலையில் மாபெரும் சாதனை படைத்த
மஞ்சுளா பஷனின் 6வது ஆண்டு நிறைவு
விழாவையும் 7வது ஆண்டு பிறந்த தின விழாவையும் முன்னிட்டு
கனடா மாநகரம் இதுவரை கண்டிராத நேர்மையான

# மாபெரும் மலிவு விற்பனை

# மஞ்சுளா பஷன்

மார்ச் 19ம் திகதி முதல் ஏப்ரல் 12ம் திகதி வரை

FROM MARCH 19

To APRIL 12



சாரம் தைத்தது
இடுப்புச்சங்கிலி
சாறி பிளவுஸ்
காமாட்சி விளக்கு
சாறி உள்பாவாடை
~~$10.00~~
$4.99
மட்டுமே

லைனிங் துணி
~~$3.00~~ 1யார்
$0.99
மட்டுமே

இந்தோனேசியா
பற்றிக்கவுண்
~~$15.00~~
$7.99
மட்டுமே

எவர் சில்வர் பேணி
~~$2.00~~
49¢
மட்டுமே

மஞ்சுளா பஷனின் விலையைவிடக் குறைவாக வேறு எங்காவது கொள்வனவு செய்தால் பணம் மீளளிக்கப்படும்.

பொருட்களின் விலை விபரம் உள்ளே . . .

## ஆயிரத்திற்கு மேற்பட்ட எவர் சில்வர் பொருட்கள் இந்தியாவில் விற்கும் விலையைவிடக் குறைந்த விலையில்

| | நடைமுறை விலை | நம்பமுடியாத மலிவு விலை |
|---|---|---|
| கறி சமைக்கும் சட்டி . 10Pcs | $125.00 | $74.99 |
| கறி சமைக்கும் சட்டி 8Pcs | $70.00 | $34.99 |
| நிறைகுடம் ...... Set 9Pcs | $35.00 | $24.99 |
| ஸ்ரீமர் .......... Steamer . 3pcs | $25.00 | $14.99 |
| இட்லி பானை .... Small | $25.00 | $ 9.99 |
| இட்லி பானை .... Medium | $30.00 | $21.99 |
| இட்லி பானை .... Large | $35.00 | $24.99 |
| காமாட்சி விளக்கு ... Brass | $10.99 | $ 4.99 |
| சாப்பாட்டுத் தட்டு | $ 4.00 | $ 1.99 |
| கறிக்கிண்ணம் ... 24 துண்டுகள் | $75.00 | $49.99 |
| கறிக்கிண்ணம் ... 12 துண்டுகள் | $30.00 | $19.99 |
| கறிக்கிண்ணம .... 10 துண்டுகள் | $30.00 | $19.99 |
| அப்பச்சட்டி மூடியுடன் 2pcs | $25.00 | $11.99 |
| பலகார அச்சு .... 15 சில்லுடன் | $25.00 | $14.99 |
| அடுப்பு வளையம் | $ 4.00 | $ 1.99 |
| கறிசமைக்கும் சட்டி . 2pcs | $25.00 | $12.99 |
| கறிசமைக்கும் சட்டி Copper | $30.00 | $14.99 |
| தாச்சி ........ 2pcs Copper பூசியது | $30.00 | $14.99 |
| Ice cream set ..... 13pcs | $25.00 | $16.99 |
| Ice cream cup | $ 3.00 | $ 1.49 |
| Welcome set 3pcs | $20.00 | $ 9.99 |
| கறிக்கிண்ணம் 6 துண்டுகள் | $20.00 | $11.99 |
| புட்டுப்பானை பெரியது | $15.00 | $ 7.99 |
| ஐயப்பன் குத்துவிளக்கு | $ 5.00 | $ 2.99 |
| பொங்கல் பானை | $30.00 | $19.99 |
| தசாங்கம் | $ 2.00 | $ 0.99 |
| எவர் சில்வர் பேணி | $ 2.00 | $ 0.49 |
| கரண்டி வகைகள் | 49 சதம் மட்டும் | |

4' Brass குத்துவிளக்கு $399.99

ஆடம்பர பொருட்கள்,
இமிற்றேசன் நகைகள்,
விளையாட்டுப் பொருட்கள்,
கலைப்பொருட்கள்,
சாமிபடங்கள், பட்டுகள்
இன்னும் எண்ணிடலங்காப்
பொருட்கள் மிக மிக மலிவு விலையில் 50% கழிவு விலையில்

## நாகரீகத்தின் பிறப்பிடம் மஞ்சுளா பஷன்

| | நடைமுறை விலை | நம்பமுடியாத மலிவு விலை |
|---|---|---|
| டயானா சாறி | $40.00 | $24.00 |
| பட்டுவேட்டி சால்வையுடன் | 35.00 | 24.99 |
| சாரம் தைத்தது | 10.00 | 4.99 |
| லைனிங் துணி 1யார் | 3.00 | 0.99 |
| பிளவுஸ் துணி | 6.00 | 3.24 |
| கொட்டன் வேட்டி | 20.00 | 9.99 |
| சாறி உள்பாவாடை | 10.00 | 4.99 |
| முடிமயிர் | 8.00 | 3.99 |
| Sofa cover | 35.00 | 24.99 |
| Bed cover 2 தலையணை உறையுடன் | 35.00 | 24.99 |
| தூய காஞ்சிபுரம் | 125.00 | 74.99 |
| மைசூர் சில்க் | 100.00 | 49.99 |
| பனாரஸ் | 250.00 | 124.99 |
| கோலம், ரங்கோலி, அபூர்வா | 200.00 | 99.99 |
| அம்பர் ரெறின், கோடம்பாக்கம் | 30.00 | 20.00 |
| மொனிக்கா | 30.00 | 19.99 |
| நைலெக்ஸ் சாறி | 25.00 | 14.99 |
| காதல் மன்னன் | 30.00 | 19.99 |
| காஷ்மீர் சாறி | 35.00 | 24.9[illegible] |
| மும்தாஸ் + தாஜ்மகால் சாறி | 30.00 | 19.99 |
| பெல்கம் சாறி | 25.00 | 14.99 |
| பாவாடைத் தாவணி தைத்தது | 30.00 | 19.99 |
| கற்பிணிகளுக்கான உடைகள் | 25.00 | 14.99 |
| இந்தோனேசியா பற்றிக்கவுண் | 15.00 | 7.99 |
| ரம்பா, நக்மா சூட் | 75.00 | 34.99 |
| சாறிக்குஞ்சம் | 8.00 | 3.99 |
| பஞ்சாபி சூட் (Children) | 25.00 | 14.99 |
| பஞ்சாபி சூட் | 45.00 | 24.99 |
| இடுப்புச் சங்கிலி | 10.00 | 4.99 |
| சாறிபிளவுஸ் | 10.00 | 4.99 |

இன்னும் பல பல

பூவேலி, படையப்பா, சார்லினி சூட், நக்மா,
சிம்ரான் இவ்வாறாக
1999ம் ஆண்டிற்கான புதிய
பஞ்சாபி சூட்டுக்கள் பம்பாயிலிருந்து
நேரடித் தெரிவுகளில்

மலிவின் மறுபெயர் மஞ்சுளா பஷன்

